**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 27.09.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் **: 27.09.2019** இராசிபுரம் நகராட்சி

**<u>பொருள்கள்</u>**

(1) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நடைபெறும் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணிகளுக்கும், பன்றி காய்ச்சல் நோய் தடுப்பு பணிகளுக்கும், நகரின் முக்கிய பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கவும், பொதுக் கழிப்பிடங்கள், பஸ் நிலையம், மார்கெட் ஆகிய பகுதிகளை தூய்மையாக வைத்திருக்கவும், பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும் கீழ்காணும் கிருமிநாசினிகள் மற்றும் இதரப் பொருட்கள் இருப்பில் இல்லாத காரணத்தினாலும், அவசியம் தேவைப்படுவதாலும், கீழ்காணும் பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **கிருமி நாசினிகள்** | **அளவு** |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 20 மெ.டன் |
| 2. | பிளீச்சிங் பவுடர் | 3 மெ.டன் |
| 3. | பினாயில் | 400 லிட்டர் |
| 4. | லைசால் | 200 லிட்டர் |
| 5. | லெமன்கிராஸ் | 40 லிட்டர் |
| | **இதரப் பொருட்கள்** | |
| 6. | பிளாஸ்டிக் பேலிங் மரப்பெட்டி (Manual Box) | 2 எண்ணிக்கை |
| 7. | சிறிய ரக எடை மிஷின் (Electronic) | 4 எண்ணிக்கை |

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2519/19/எச்1)**

**தீர்மானம் எண். 631**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட 27 வார்டுகளிலுள்ள வீடுகளில் சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அவற்றின் அளவுகளை துல்லியமாக கண்டறிய எடை போடுவது அவசியமாகிறது. எனவே, வீடுதோறும் சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பை மக்காத குப்பை ஆகியவற்றை எடை போட (waste quantification) 7 சிறியதாக எலக்ட்ரானிக் தராசு வாங்கிய வகையில் ரூ. 2800/– தொகையினை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு ரா. பாஸ்கரன் அவர்களால் செலுத்தப்பட்டது. எனவே, தொகை ரூ. 2800/–ஐ திரு ரா. பாஸ்கரன், துப்புரவு ஆய்வாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2570/19/எச்1)**

**தீர்மானம் எண். 632**

அனுமதிக்கப்பட்டது.

(3) நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 18446/2019/ WS1 நாள் 27.09.2019–இல் கோரியபடி நகராட்சிப் பகுதியிலுள்ள நீர் நிலைகளில் மறு சீரமைப்பு (restoration) வசதி செய்ய மதிப்பீடு தயார் செய்து அனுப்ப அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நகர் சர்வே எண். வார்டு–B, பிளாக் எண். 4, நகர புல எண். 87–இல் 1393 ச.மீ. அளவில் அமைந்துள்ள நகராட்சி அலுவலகம் பின்புறமுள்ள கிணறு தற்பொழுது பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளது. எனவே, தற்பொழுது நகராட்சியில் செய்யப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவு பெறும் நிலையிலுள்ளது. எனவே, இத்திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு வந்த பிறகு தற்பொழுதுள்ள கழிவுநீர் கால்வாய் மழைநீர் கால்வாயாக மாற்றி அதன் மூலம் பெறக்கூடிய மழைநீர் முடிவில் மேற்கண்ட கால்வாய் மூலமாக சேகரிப்பு செய்து மேற்கண்ட இடத்தினை தூய்மைப்படுத்தி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகள் செய்ய ரூ. 35.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் முழு மான்யமாக பெற திட்ட முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(1668/19/இ2)**

**தீர்மானம் எண். 633**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு பித்தளை சாக்கடை தெளிப்பான் மற்றும் கொசு ஒழிப்பு கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 19.09.2019 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **பித்தளை சாக்கடை தெளிப்பான் ஒன்றின் விலை** | **கொசு ஒழிப்பு கேஸ் சிலிண்டர் ஒன்றின் விலை** |
|---|---|---|---|
| 1) | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல். | ரூ. 14700/– | ரூ. 248/– |
| 2) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், சேந்தமங்கலம் | ரூ. 14900/– | ரூ. 252/– |

வரிசை எண்.1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்திற்கு விநியோக ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2009/19/எச்1)

**தீர்மானம் எண். 634**

அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இந்நகராட்சிக்கு வறட்சி நிவாரணத் திட்டம் 2019–இல் வார்டு எண். 10–இல் வி. நகர் சாலை எண். 17–இல் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணி ரூ. 4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மானம் எண். 518 நாள் 28.02.2019–இல் அனுமதி அளித்ததை தொடர்ந்து பணிகள் நடைபெற்று வரும் வேளையில் எதிர்பாராத விதமாக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத சில இனங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் செய்து முடிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | MCB Switch 32A | - | 1 No. |
| 2) | 50mm GI coupling | - | 8 No. |
| 3) | 50 mm GI Tee | - | 2 No. |
| 4) | 50mm GI End cap | - | 1 No. |
| 5) | 25mm Tank nipple | - | 2 No. |
| 6) | 25mm x 20mm GI Reducer | | 2 No. |
| 7) | 63mm PVC pipe | - | 5.5m. |
| 8) | 63mm PVC bend | - | 1 No. |

மேற்படி விவரப்படிக்கான பணிகள் செய்து முடிக்கப்பட்டது. அவ்வாறு செய்து முடிக்கப்பட்டப் பணிகள் அனைத்தும் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையான ரூ. 4.00 இலட்சத்திற்குள்ளாகவே வருகிறது. எனவே, கூடுதலாக செய்யப்பட்ட பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்குள்ளாகவே வருவதால் மன்றம் அனுமதிக்கலாம்.

(352/19/இ2)

**தீர்மானம் எண். 635**

அனுமதிக்கப்பட்டது.

( 6 ) இந்நகராட்சிக்கு வறட்சி நிவாரணத் திட்டம் 2019–இல் வார்டு எண். 4 காந்தி சாலையில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணி ரூ. 4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மானம் எண். 522 நாள் 28.02.2019–இல் அனுமதி அளித்ததை தொடர்ந்து பணிகள் நடைபெற்று வரும் வேளையில் எதிர்பாராத விதமாக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத சில இனங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் செய்து முடிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | MCB Switch 32A | - | 1 No. |
| 2) | 50 mm GM NRV | - | 1 No. |
| 3) | 50 mm GI Tee | - | 1 No. |
| 4) | 50 mm GI coupling | - | 5 No. |
| 5) | 63 mm PVC Tee | - | 1 No. |
| 6) | 63 mm PVC Elbow | - | 2 No. |
| 7) | 63 mm PVC pipe | - | 21 No. |
| 8) | 25 mm tank nipple | - | 2 No. |
| 9) | 25 mm x 20 mm GI Reducer | - | 2 No. |
| 10) | 90 mm PVC pipe | - | 7.85 m. |

11) 90 mm x 63 mm PVC Reducer - 2 No.
12) 90 mm PVC Elbow - 6 No
13) 110 mm x 90 mm PVC Reducer - 3 No.
14) 110 mm PVC Elbow - 7 No.
15) 110 mm PVC pipe - 41.4
16) 110 mm PVC Tee - 1 No.
17) 63 mm PVC Elbow - 2 No.
18) 63 mm PVC pipe - 10 No.
19) 90 mm x 75 mm PVC Reducer - 1 No.
20) 63 mm x 20 mm saddle pipe - 1 No.
21) 25 mm GI pipe - 2 No.
22) 110 mm PVC coupler - 5 No.
23) 110 mm PVC bend - 3 No.
24) 160 mm x 110 mm PVC reducer - 1 No.
25) 200 mm x 160 mm PVC reducer - 1 No.

**Laying of pipes**

26) 63 mm PVC pipe - 21 No.
27) 90 mm PVC pipe - 7.85
28) 110 mm PVC pipe - 41.4
29) Painting 2 coats of cement paint - 5.22
30) 40 mm ISS HBG metal - 2.36
31) 1 m die RCC ring - 9 No.

மேற்படி விவரப்படிக்கான பணிகள் செய்து முடிக்கப்பட்டது. அவ்வாறு செய்து முடிக்கப்பட்டப் பணிகள் அனைத்தும் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையான ரூ. **4.00** இலட்சத்திற்குள்ளாகவே வருகிறது. எனவே, கூடுதலாக செய்யப்பட்ட பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்குள்ளாகவே வருவதால் மன்றம் அனுமதிக்கலாம்.

(352/19/இ2)

**தீர்மானம் எண். 636**

அனுமதிக்கப்பட்டது.

(7) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி **18.09.2019** அன்று கடிதம் தங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். **283**, நாள் **18.06.1998**–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகளிலும் இயங்கி வரும் கணினி பிரிண்டர்களுக்குத் தேவையான டோனர்கள், அரசாணை எண். **283** நாள் **18.06.1998**–இன்படி மேற்படி நிறுவனமான

ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1924/19/பி3)

**தீர்மானம் எண். 637**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி